September, 1912. Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 2.] பரிதாபி-ஸூ புரட்டாசி-மீ [பகுதி-6

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| இராமாயணம் | 407 |
| ஆன்ம இலக்கணம் (தூத்துக்குடி ஸ்ரீமாந். பெ. முத்தையபிள்ளை) | 409 |
| பக்தி | 411 |
| மானிடப்பிறவி எடுத்தார்க்கு மறுபிறப்புண்டா? | 413 |
| சதற்காரணமும் அதன் பயனும் | 417 |
| விநோதக்கூற்று | 418 |
| வினாவிற்கு விடை | 41 |
| மாணிக்கவாசகர் | 420 |
| 'பாந்திய' என்னும் பண்புடைக்குமரி | 423 |
| இதுவன்றோ வியப்பினும் வியப்பு | 425 |
| பலதேசவர்த்தமானம் | 426 |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.
வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

Copy Right Registered.

லெக்ஷ்மி விலாச பிரஸ், திருச்சி.

# செந்தமிழ்ச்செல்வம்

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-2.] பரிதாபி-௵ புரட்டாசி-மீ [பகுதி-6


## இராமாயணம்.

இராமாயண கதை நமது பரதகண்டத்தி லுள்ள சிறுவர் முதலாக முதியோராக உள்ள எவருக்கும் தெரிந்த கதை எனக் கூறுவதும், இதனைப் பரதகண்டத்தாரிற் சற்றேறக்குறைய எல்லோரும் மிக விருப்பத்தோடும் பத்தியோடும் கொண்டாடுகின்றன ரென்பதும் ஓர் வியப்பன்று. புறநாட்டார்களும் இதனை விரும்பிப் படிப்பதுமன்றிப் பக்தியோடு கொண்டாடுவதுமே மிக்க வியப்பைத்தருவதாம். இன்னும் நம்மவரிற் சிலர் இராமாயண கதை பொய்யென்றும் கற்பனைக் கதை யென்றுங்கூறிச் சிலர் கொண்டுள்ள பக்தியைச் சிதைப்பது நனிமிக வியப்பைத்தருவதாம்.

இனி, இக்கதை எவரு முணர்ந்ததா யிருப்பினும் இதனைச்சுருக்கிக் கூறி இதன் கண்ணுள்ள சில இரகசியங்களையும் இலைமறை காய்போலுள்ள அரும் பெரும் பொருள்களையும் பெரியோர் வாய்க்கேட்டபடியும் எமதுயுக்தியாற் கண்டவற்றையுங்கூட்டி ஈண்டு நமது செந்தமிழ்ச் செல்வத்தின் வாயிலாய் விடத்துணிகின்றோம்.

பலராலுங் கொண்டாடப்படுகின்ற ஒரு பொருள் அவரவர் தன்மைக்கேற்றபடி மதிக்கப் பெற்றும் பயன் செய்யப் பெற்றுமிருக்குமென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

உதாரணமாக, சந்தனத் தருவைக் கண்ட ஒருவன் இது குளிர் நிழலைத் தருகின்றதென்று அதனடியில் சிறிது நேரமிருந்து செல்கின்றான். மற்றொருவன் இது நறுமணமுடைத்தென்று கண்டு அதனடியிலமர்ந்து குளிர் நிழலையும் நறுமணத்தையு நுகர்ந்து செல்கின்றான். முன்னவனோ நிழலொன்றையே கண்டான்; அவனுக்கு ஆக்ராண சக்தியின்மையால் மணத்தையோர் தற்கில்லாமற் போயினான். பின்னொருவன் வந்தவன் இம்மரத்தின் கட்டைகள் நன்றாய் நெருப்புப் பற்றுமென்று கையிற் கொண்டிருந்த கோடரியினால் வெட்டி வீழ்த்தினான். இவனோ முன்னோர் கண்டபயன் ஒன்றையுங் கருதிலன் அனுபவித்திலன். இதனானே நம் இராமாயணகதையும் மக்களால் தத்தமறிவு நுட்பத்திற் கேற்றவாறு கொள்ளப்படுகின்றது என்பேம்.

இங்கு இராமாயணக்கதை சம்பந்தமாக எம்மாலெழுதப்படுவது உலகிற்கு எம்மட்டும் பயனுறும் என்பதையாம் செவ்வனேயறிவோம்.

சிற்சிலர் எம் எண்ணங்களையும் எமது யுக்திகளையும் ஒப்பாது தப்பென்ன முன் வரலாம்.

அதற்கு யாம் சிறிதும் அஞ்சகில்லேலம்.

ஏனெனில், அஞ்சின் எமது உள்ளத்தே அருமையெனக் கண்டவைகளும் உண்மைப் பொருளென உள்ளங் கொண்டவைகளும் பிறர் புலனுகாது மறையுமே எனக் கருதியேயாம்.

ஓரணங் கைக்கண்டால் அவளுக்குப் பிறிதாகாத மேனியீதென்றும் பிறிதாய அவ்வணங்கின் மானங்காக்கவும் அழகு செய்யவும் புனைந்துள்ள வண்ணவுடையும் மண்ணிய மணிப் பூணு மீதென்றும் வேறுபிரித்துணர்வதுபோல ஆன்ரோர் உரையுள்ளும் மூதுரைகளுள்ளும்உண்மை யீதென்றும் அதனைக் கவினுறச்செய்த கற்பனையீதென்றுங் கண்டறிவதே கொண்டாடத்தக்கதாம்:

இது பற்றியன்றோ நமது மாதானுபங்கியாரும்,
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினுமப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றருளினர்.

நிற்க, ஸ்ரீராமர் சரித்திரத்தைச் சொல்லும் நூலுக்கு இராமாயணம் என்று பெயர். வடமொழிப்பெயர் "ராமாயணமென்பது" தமிழில் ரகரம் மொழி முதல் வாராதாகையால் " ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்" என்ற சூத்திர விதிப்படி இகரத்தை ஏற்று நின்றது.

"ராமாயணம்" என்பது, முதலில் வால்மீகி முனிவர் செய்த நூலுக்கு இயற்பெயராம்.

"முதனூல் கருத்த னளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும் இடுகுறி யானு நூற் கெய்தும் பெயரே." என்னுஞ் சூத்திர விதிப்படி வழி நூல்களாகிய பிற நூல்களுக்கும் இராமாயணம் என்னும் பெயர் வழங்கி வருகின்றது.

ராமாயணம் என்பது, ராம+அயந என்று இரண்டு மொழி சேர்ந்தது; இது (நூற்) பெயராதலால், வடநூல் விதிப்படி "ராமாயணம்" என நிலை மொழியில் ரகாரம் வர வருமொழியில் நகாரம் ணகாரமாயிற்று. தன் திறத்தில்யாவரும் மனங்களித்திருக்கப்பெற்றவன் என்பது '[illegible]' என்னுஞ் சொல்லுக்குப் பொருள்; சகல சற்குணங்களும் பொருந்தினவ னென்பது இதன் கருத்து. 'அயநம்' அடைய அல்லது

அறியக் கருவியாயுள்ளது. ஆகவே, இராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல் என்பதாம்; இராமனுடைய குணாதி வைபவங்களைத் தெரிவிக்கும் நூல் என்பது, இரண்டாம்பொருள்.

அயநம்=ஸ்த்தாநம், விஷயம் எனப்பொருள் கொண்டு, இராமனை விஷயமாகவுடைய நூலெனக் கூறுதலும் ஒன்று. "ஸீதாயாச்சரிதம் மஹத்" என்று சிறையிருந்தவளேற்றஞ் சொல்லும் பிரபந்தமாகையாலே, ராமாயண மென்பதற்கு ராமா அயநம் எனப் பிரித்து, சீதையை அறிவிக்கும் பிரபந்த மென்றுஞ் சிலர் பொருள் உரைத்திருக்கின்றனர். (இன்னும் வரும்)

**பத்திராதிபர்.**

## ஆன்ம இலக்கணம்.

(397-ம் பக்கத்தொடர்ச்சி.)

"உலகநெருப்பைக் கடந்தொழியா ஞானவுத்தி மடுப்பேனோ
விலகுகுடும்பத் துயர்நீங்கி யென்னுட்டுறவி யாவேனோ
திலக மறையின் பொருளிதெனத் தேற்றுங் குரவர் காண்பேனோ
கலக வுடலப் பிணி தணந்து கடவுளை யான் காண்பேனோ"

என இவ்வாறு ஆசிரியனைத் தேடுவன். தேடவே வேண்டுவார் வேண்டுவதே யீந்தருளும் வள்ளற்றன்மையுடைய பரமகருணாநிதியாகிய சிவபெருமான் விஞ்ஞானகலர்க்கு அறிவுக் கறிவா யுண்ணின்றும், பிரளயாகலர்க்கு நாற்றோளும், முக்கண்ணும், களைமிடறு முதலிய உறுப்பிற்றாய் முத்தொழில் நடத்தி நின்ற தன்னியற்கை வடிவே குருவடிவாகக் காட்டி முன்னின்றும் சகலர்க்கு அவர் வடிவு போலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின் முன்னாக மறைந்து படர்க்கையினின்றும் தத்துவ ஞானத்தை அனுக்கிரகிக்க வேண்டுவது முறைமையாதலின் இதுகாறும் உண்ணின்றுணர்த்திய அப்பரம்பொருள் குரு மூர்த்தியாய் எழுந்தருளி வரும். வரவே,

"தேனுண்டளிகள் பண் பாடுஞ் செறிகற்பக நேர் குருந்தடிக்கீழ்
மானு மழுவுஞ் சதுர்ப்புயமு மணிக் கந்தரமு மறைத்தருளி
யீன மகன்ற திருவாதவூரர்க்காக வெழுந்தருளு
ஞான முனியே [illegible] பழிச்சினவே"

என்றபடி வந்துவன். வந்தவே இருவினை யொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் நிறைந்த உத்தமத்தன்மையை நோக்கி விய

ந்து தத்துவங்களினின்றும் நீங்கி தன்னையும் தலைவனையும் தெரிசிக்கும், ஞானோபதேசத்தைச்செய்தருளி அவ்வுபதேசத்தில் உறைத்து நிற்காது பண்டைப் பயிற்சி வயத்தால் விடயத்தில் மீளுமாயின் அவ்விடயங்களை அசத்தென்று காணுமுபாயத்தையும் அவ்விரண்டினையும் உணர்த்துவதாய ஸ்ரீபஞ்சாக்கர ஜெபத்தையும் உபதேசித்தருளுவர்.

இவ்வாறு உபதேசம் பெற்று சாதனத்தில் உறைத்துநிற்கும் போது மந்திரான்மாவாகும். இது ஆன்மாவிற்கு சிறப்பியல்பில் பொதுவென்னப்படும்.

இனி, மேற்கூறியவாறு சாதனத்தில் உறைத்து நிற்றலால் அசத்தாயுள்ள பாசத்தினின்றும் அறவே விடுதலையெய்தி பெத்த நிலையில் சிவம் தோன்றாது தான் தோன்றினின்றவாறு போல இவ்விடத்தில் ஆன்மா வேறு காணப்படுமாறின்றி சிவனோடொற்றுமைப் பட்டுத் தனக்கெனச் செயலின்றி அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாய் இறைபணியில் நிற்பன்.

இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவை அவருக்குப் பந்தமாதலில்லை. ஏனையோர் செய்யும் வினை பந்தமாதற்கும் இவர் செய்யும் வினைப் பந்தமாகாமைக்கும் ஏது வென்னை யெனின் தான் முதலென நிற்றலும் தான் முதலன்றென இறைவனைச் சார்ந்து நிற்றலுமேயாமென்க. சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதலின் இங்ஙனம் இருவேறு வகைப்படச்செய்யும் இறைவன் செயல் நடுநிலைமைக்கு விரோதமன்றென்க. பாச க்ஷயம், சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள் இது பாச க்ஷயமாம்.

இவ்வாறு பாசக்ஷயம் வந்தபொழுது துரிய நிலைக்கண்ணதாகிய அருள் நிலையென்னும் அதாவது பதிநிலையாகிய சுகப்பிரபை மாத்திரையே விளங்குவதன்றி துரியாதீத நிலைக்கண்ணதாகிய சிவத்துவ விளக்கமென்னும் பரமசுகமாகிய ஆனந்த விளக்கம் விளங்காமையின் அது விளங்குதற் பொருட்டு உருவத்தைக் காணும்படி கண்ணுக்குக் காட்டியும் கண்ணோடு ஒருங்கிசைந்து நின்று உருவத்தைக் காணும் ஆன்மாப்போல அறிவிக்க அறியும் இயல்புடைய ஆன்மாவிற்கு விடயத்தை அறியும்படி உடனாய் நின்று அறிவித்தும் அறிந்தும் வரும் இறைவனுடைய அத்துவிதநிலையை மறவாது கடைப்பிடித்து அன்பு செய்யும். செய்யவே இறைவன் திருவடியாகிய சிவானந்தானுபூதியைத்தலைப்படும். அத்துவிதமாவது இருபொருளை ஒப்புக்

கொண்டு அப்பொருள் வேறு பிரிக்கமுடியாமல் இருப்பதை உணர்த்தும். இதனைச் சைவசித்தாந்த சக்ரவர்த்தியாகிய ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் சிவஞானபோதச்சிற்றுரையில் அத்துவிதமாவது பேதப் பொருளிரண்டும் தம்முள் அபேத மாதற்குரிய சம்பந்த விசேடமெனை அருளிச்செய்த திருவாக்கால் இனிது தெளிக. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இவ்வாறு இறைவன் உடனாய் நின்று உபகரித்துநிற்கும் உரிமையை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருட்கட் செல்லும் இச்சை அடங்காது மீதூறும். ஆதலின் அவ்வழி அவ்விச்சையே பேரானந்தமாக விளங்கித் தோன்றும். இந்த அன்புநிலையைத் தான்,

"அன்பே சிவமாவது யாருமறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே"

எனத் திருமூல நாயனாரும்

"இன்பமே என்னுள அன்பே
அன்பினில் விளைந்த ஆரமுதே" எனை

மணிவாசகப் பெருமானும்

"இன்பமெனும் அன்புண்டு" என ஸ்ரீ

தாயுமான சுவாமிகளும் அருளிச் செய்வாராயினர்.

---

## பக்தி.

405-ம்பக்கத்தொடர்ச்சி.

---

"பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும்............ .."

எனும் எமது ஒளவைப்பிராட்டியாரது அருமைத்திருவாக்கின் படி, முன்னைப் பலபிறவிகளிற் செய்த நல்வினைகளினாலேயே இப்பிறப்பில் நமக்கு அப்பக்தி ஜனித்தல் வேண்டும். ஆதலின், உண்மைப் பக்தியிலாத சிலரும், உலகவழக்கினை யொப்ப நடக்க விரும்பிதானதியறங்களும், விரதாதிகளும், தெய்வாராதனை முதலிய கிரியைகளும் இயற்றலியல்பு, அன்னார் புரிவதனைத்தும் மீட்டும் மீட்டும் பிறவிக்கே ஏதுவாமென்றும் பிறவிக்கேதுவாகிய அக்கன்மமும், மனக்குவிந்தியற்றப்படுதலொன்றெனவும் புறக்கணித்திகழ்ந்துரைப்பாருமுளர் அவ்வாறவர் கூறும் கூற்றும், கொள்கையும் உண்மையேயெனினும் அவ்

வர் பரிபாகத்தினை நோக்குழி ஞானிகட் கொப்பப்படுவதொன்றி னை மற்ற ஏனையோரிடத்துக் கூறுதல் குற்ற முடைத்தே, ஏனெனில் பக்தியில்லாமல் அநுட்டானம் பற்றியேனும், கீர்த்தியை விரும்பியே னும் ஒருவர் நற்செய்கையைப் புரிவாரெனினும், அந்நல்வினை செய்ய ச்செய்ய அதன் பயனாக அச்செய்கையினிடத்து அகத்துள்ளன்பு பெறப்படுதலியல்பு அல்லது மறுபிறப்பிலேனும் புண்ணிய வினைகளி னூக்கப்பாடுடையானாய்ப் பிறத்தல்கூடும் ஊக்கத்தால் ஒழுக்கமும், ஒழுக்கத்தால் நல்லோரினது கேண்மையும் ஒன்றின்வழி மற்றொன் றாய்ப் போதரலெளிதாம் குறைந்த மாற்றுள்ள பொன்னினைப்புடம் பல இட்டுத்தங்கமாக்குதல் போல மிக்க அபக்குவ சிலர்களையும் பற் பல பிறவிகளிற்றோற்றுவித்தே அவர்களைத்தூயாக்குதல் பதியாயுள் ள கடவுளின்பாரம். உயர்ந்த தங்கமாகியதை யுணர்ந்த பின்னும் அத னை மீட்டும் புடத்திட எவரும் விழையா (விரும்பாத) வாறுபோலும் உண்மை ஞானம் பெற்று பரிபக்குவம் வாய்ந்த ஜீவருக்கு ஜனனாபே ட்சை இலதாகின்றது. இவ்வுண்மையினால் ஞானிகள் பிறப்பை யிகழ் ந்து மறுத்தலும், அஞ்ஞானிகள் தமக்கு ஞானம் வருதற்பொருட்டு பல நற் பிறவிகளையடைய விழைவதும் நீதியே. இவ்வுண்மை கருதி யே ஆன்றோர் பலரும் உலகத்தவர்க்கு எண்ணிறந்த விரதங்களையும் பூசைகளையும் நோன்புகளையும் ஏற்படுத்தி அவைகளில் நம்பிக்கை போதர பற்பல உதாரண நூல்களும் (கல்பங்கள்) பற்பலகாதைகளும் இயற்றி ஆங்காங்கு ஆலயங்களும், திருவிழாக்களும் பிரதிட்டித்து நடத்தியவை யழியாது நிலைநிற்றற் பொருட்டு சில சாசன முதலிய பற்பல பிரபல ஆதாரங்களையும் இப்புரதகண்டத்தினிற்றாபித்தனர். ஆதலின் நல்வினையொருவராற்றுங்கால் அன்னார்க்கதில் மென்மேலும் ஊக்கம் வருவித்தலே நல்லோர் கொள்கையன்றி அன்னாக் கூக்கங் குன்றுறவிகழ்தலன்று. இதுநிற்க, நாம் இதுவரையிலும் பக்தியின்ன தென்றும் அப்பக்தியை யின்னின்னவகை உபாயங்களால் அடைதற் குளதென்றும் அப்பக்தியினால் சரியையாதி நாற்பாத அநுட்டானங் களும் அதனுள் நான்காவதாகிய ஞானத்தினால் முத்தியும் அடைத ற்பாலதென்றும் பொதுவகையாற் கூறினோம். இனி அப்பக்திக்குரிய கடவுள் ஒருவரேயாயினும் பற்பல மதத்தரின் கொள்கைகளின்படி பற்பல பெயர்களால் பக்தி பண்ணுதலே உலகத்தியற்கை அதனால் விரோத புத்தி மேலிட்டுத் தம்மைத் தாமே புண்படுத்திக் கொள்வ தும் தோன்று தொட்டுள்ளதே,

"யாதொரு தெய்வங்கொண்டீரத் தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

எனும், திருச்செய்யுளின்படி, யார், யார் எவ்வெப்பெயரால் கடவுளைப் பக்திசெய்யினும் அவ்வவர்கட்கு அவ்வப்பெயரால் அவ்வப்பாவனை வடிவமாய் முன்னின்றருள்பவன் உமையோர் பாகமுடைய பசுபதியேயென்பது சைவசமயிகளுடைய துணிபாதலின், அன்னார்க்கு யாவு முடன்பாடேயாம். அவ்வாறின்றிப் பேதமைப் பாட்டினால் கடவுள் இரண்டு மூன்றெனவும் அவ்வவற்றுள் தாங்கள் குறியிட்டுதந்து பசரிக்கும் பெயர்க்குரியவரே முதற்கடவுளென்றும் மயங்கி பிறமதத்தரின் கடவுட்குறியீட்டுப் பெயர்களையிகழ்வோர் (உண்மையில் கடவுளொன்றும் பெயர் பலவுமாயிருத்தலினால்) தங்கள் கடவுளையே தாம் இகழ்ந்தவர்களாகி ஆழ்நரகிற்றள்ளுண்டலக்கணுறுவர். இப்பொருள்களையுள்ளிட்டே "தெய்வமிகழேல்" எனச் சைவசிகாமணியாகிய ஔவைப்பிராட்டியாரவர்கள் ஓரே சொல்லில் சுருங்கச்சொல்லி விளக்கவைத்தனர். ஆதலின் அம்முதுரையை யாவரும் சிரமேற்று உய்யுநெறிபெறுவோமாகவும். ஓம்தத்ஸத்.

J. N. Somu.

---

## மானிடப் பிறவி எடுத்தார்க்கு மறு பிறப்புண்டா?

(315-ம் பக்கத்தொடர்ச்சி.)

மனிதருக்குள்ள சுகதுக்காதி அந்தஸ்துபேதங்களும் நாமசாதி சுபாவகுண பேதங்களும் முக்கியமானவை. இவ்வுலக நடக்கையைச் சற்று உற்றுப்பார்ப்போமாயின் சிலர் திரவியவான்களாய்ச் சந்தோஷ மனுபவிப்பதையும் சிலர் தரித்திரர்களாகத் துக்கத்தையனுபவிப்பதையும் சிலர் முடவராயும் சிலர் அந்தகராயும் சிலர் அங்கஹீனராயும் இப்படிப் பலபேதங்களுடனே பிறப்பதைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம். இதைக் கண்டல்லவோ தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை."

என்று திருவாய்மலர்ந்தருளினார். அவரவர்கள் பூர்வ சன்மத்தில் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இப்பிறப்பில் நன்மை தீமைகளை யனுபவிப்பார்களென்று வேதவாக்கியமும் உண்டு. தரித்திரம்

அங்கஹீனம் முதலிய குறைகள் பெரியனவல்லவென்றும் சகல ஸாம்ராஜ்ய வைபவங்களை யனுபவிக்கும் அரசனும் அனுதினமும் அந்த தரித்திரத்தால் வருந்தி இரந்துண்ணும் பிச்சைக்காரனும் தங்களுக்குரிய சந்தோஷாதி அனுபவங்களில் சமமானவர்களென்று சிலர் சொல்லுவார்கள். அந்தந்த நிலைக்குத் தக்கபடி சுகதுக்கங்கள் சமமாயிருக்கிறபடியாலும் எல்லா அந்தஸ்துகளும் சமமானவையென்றும் இவைகள் பூர்வஜன்ம சுகிருததுஷ்கிருத்தியங்களைச் சார்ந்தன வல்லவென்றும் வாதிக்கலாகும். இது ஒருவாறு உண்மையென்று ஒப்புக்கொண்டபோதிலும் சிலர் கேவலம் கியான சூன்னியாளாகி ஒன்றுமறியாத காட்டுமிருகங்களுக்கொப்பாகி ஒருவரையொருவர் உயிருடன் பிடுங்கித்தின்னும் மிலேச்சருக்குள் பிறந்து நன்மை தீமை என்னும் பேதமேயறியாமல் மிலேச்சராகவே வாழ்ந்துமோக்ஷ சாம்பிராச்சிய கவனமின்றி மிலேச்சராகவே இருப்பதும் மற்றவர்கள் நாகரீகமும் சீர்திருத்தமுமுள்ள நாடுகளில் பிறந்து வேதசாஸ்திராதி நூல்களைக் கற்று உண்மையையறிந்து தீமைக்கு விலகி நன்மையைக் கைப்பற்றி ஞான சம்பூர்ணராகி இகத்திலே தானே பரசுகங்களையும் அனுபவிக்கும்படி அருள் பெறுவது எதனாலென்று யோசிக்குமிடத்து பூர்வசன்ம கிருத்தியங்களை விட வேறு காரணம் எமக்குத் தோன்றவில்லை. இவை எல்லாம் பூர்வசன்ம கிருத்தியங்களின் பலனல்லவென்னுங்கால் கடவுள் சிலருக்கு நன்மையும் சிலருக்குத் தீமையும் விளைவிக்கும் பக்ஷபாதமுள்ளவரென்றும் விபரீத கொள்கையாய் முடியும். இதுவன்றி மனிதருக்குப் பிறந்த காலந்தொடங்கி ஸ்வபாவமாயுண்டாயிருக்கும் குண பேதங்களினாலும் பூர்வ சன்மம் உண்டென்னும் உண்மை விசிதமாகும். பிறந்தகாலந்தொடங்கி சிலருக்கு நற்குணங்களும் சிலருக்குத் துர்க்குணங்களும் ஸ்வபவமாகவே சிலவிஷயங்களில் விருப்பமுடையவாகவும் மற்றவைகளிடத்து வெறுப்புடையவாகவும் இருப்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். துரியோதனாதிகள் இளமைதொடங்கி காமக்குரோதாதி துர்க்குணங்களே மிகுந்து துன்மார்க்கமே பாராட்டித் துன்பமடைந்தார்களென்றும் பாண்டு புத்திரர்களாகிய தருமன் ஆதிகள் சத்குண சம்பன்னராகி இயல்பாகவே சன்மார்க்கத்தைப் பாராட்டி ஸத்பதவியடைந்தார்களென்றும் குயவன் வீட்டில்பிறந்த சாலியவாகனன் இயல்பாகவே தன் குசத்தொழிலை வெறுத்து போர்த்தொழில் விரும்பி இதில் விசேஷப் பயிற்சியடைந்து அதிவீரசூர பராக்கிரமசாலியாகிய, விக்கிரமாதித்தனை ஜயித்

தானென்றும் இதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைநம் பாவிடினும் இக்காலத்துச் சரித்திரங்களில் அளவற்ற உதாரணங்களை எளிதில் காணலாம். இதுவன்றி இப்பொழுது பிரத்தியக்ஷமாகவே ஒரு வீட்டில் பிறக்கும் இரண்டு பிள்ளைகளுக்குள் ஒருவன் இயல்பாக சற்குணசீலனாய் சன்மார்க்கத்தைப் பற்றுவதையும் மற்றொருவன் கள்ளங் கபடு கடூரமுள்ளவனாய்ச் சொன்னபடி நடவாது தீயவழியே செல்வதையும் காணலாம். விளையும் பயிர் முளையிலே என்னும் பழமொழிக் கேற்கக் கள்ளம் முதலிய துர்க்குணங்கள் இளமையில் தானே வெளிப்பட்டு அபிவிருத்தியாக நிலை பெறுகின்றன. இந்தஸ்வபாவ குணபேதத்திற்குக் காரணம் யாதென்று விசாரிக்குமளவில் இது பூர்வஜன்ம செய்கையாலாகவேண்டும். அல்லது கடவுளுடைய சிருஷ்டியாயிருக்கவேண்டும். இவ்விரண்டொழிய வேறுகாரணம் எமது புத்திக்குத் தோற்றவில்லை. கடவுள் சிலரை ஸன்மார்க்கராயும் சிலரைத் துன்மார்க்கராயும் உண்டாக்கினார் என்றுசொல்லஒருவருந்துணியார்கள். ஆதலால் இது பூர்வசன்ம பாவபுண்ணியங்களின் பயனென்றே சித்தாந்தப்படுகின்றது. பூர்வசன்மத்தில் செய்த கருமங்கள் நம்மை இந்த சன்மத்திலெப்படித் தொடரலாமென்று சங்கையுண்டாகலாம், இதற்கு பிரமாணம், நாலடியார்

"பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினை யன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு" என்னும்

வெண்பாவானுமறிக. இப்பிறப்பில் நமது அனுபவமே பிரத்தியக்ஷ பிரமாணமாயிருக்கின்றது. ஒரு துர்வழக்கத்தையாவது நல்ல வழக்கத்தையாவது அப்பியசித்தால் பிறகு அந்த வழக்கத்தை யொழிப்பது அசாத்தியமாயிருக்கின்றது ஒருதரம் நன்மை செய்தால் மறுதரம் அதை செய்வது சற்றே சுலபமாயும் இயல்பாயுமிருக்கின்றது. அதுபோலவே குடிக்குந் துர்வழக்கத்தைக் கொண்டவன் பின்பு அதை விட்டு நீங்குவது கூடாமையாயிருக்கும். எருதைத் தூக்க விரும்பினால் கன்றைத் தூக்கிப்பழகு என்னும் பழமொழிப்படி, அப்பியாசத்தினாலும் பழக்கத்தினாலுமல்லவோ சரீரத்தின் அவயவங்களுக்கு வன்மை யுண்டாகின்றது. அதுபோலவே மனோகாணங்களும் பழக்கத்தினாலும் அப்பியாசத்தினாலும் வேறுபடக்கூடுமென்பதை

அனுபவத்தால் கண்டறியலாம், ஒருநாள் விளையாட்டை யோசித்துப் படிக்கப்பழகினால் மறுநாள் அவ்வாறு செய்வது சுலபமாயிருக்கும். வாசிப்பதிலும் சிந்திப்பதிலும் விருப்பமுண்டாயிருப்பவர்கள் இதர விஷயங்களில் விசேஷவிருப்பமுண்டாயிருப்பதில்லை. சிற்றின்பத்தில் மூழ்கிவிஷயங்களைத் தேடுவோர் பேரின்ப சாதனங்களைக் கனவிலும் பாராட்டார்கள், மேலும் இந்தக்குணங்கள் அறிவுக்குக்காரணமாகிய ஆத்துமாவின் செயலேயல்லது கேவலஞான சூன்னியமாகிய பிரகிருதியாவ மல்லவென்பது பிரத்தியக்ஷபிரமாணமாகவிளங்கும்; ஆதலால் நாம் இந்த சன்மத்தில் செய்யும் பழக்கங்கள் நம்மை விடாது பற்றுவதுபோலவே பூர்வசன்ம கருமங்களும் தொடருமென்று நம்புவதற்குமிகவும் இடமுண்டு. பூர்வசன்மம் உண்டாயிருந்தது உண்மையானால் நாம் பூர்வத்தில் செய்த காரியங்கள் ஒன்றாவது கியாபகத்திற்கு வரவேண்டும். அப்படி வாராமையால் இதை நம்பக்கூடாதென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆயினும் இது சரியல்ல. ஏனென்றால் நாம் பூமியில் பிறக்குமுன் அன்னைவயிற்றில் உயிருடன் வாழ்ந்திருந்தது உண்மையானாலும் அங்கு நமக்குள்ள காரியங்கள் ஒன்றும் கியாபகத்திற்கு வரவில்லை, மேலும் அதிபாலியத்தில் செய்த காரியங்களொன்றையும் இப்பொழுது அறியோம். இதனால் நாம் அன்னை வயிற்றிலிருந்ததில்லை என்றும் பாலியபருவத்தில் வாழ்ந்ததில்லையென்றும் சொல்லக்கூடுமோ? மேலும்நாம் இப்பொழுது இருக்கப்பட்ட ஸ்திதியை பால்லிய பருவத்தோடும் குழந்தைப் பருவத்தோடும் அன்னை கர்ப்பத்தில் கருவுண்டாகிய நாள் முதல் அடையும் பலவுருவங்களையும் அந்தந்த ஸ்திதிக்குரிய குணகுணங்களையும் யோசிக்குமளவில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாமல் விசேஷ பேதப்பட்டிருக்கின்றன. ஆயினும் இந்த விகாரங்களனைத்தையும் அடைந்தஆத்மா அல்லதுபிராணி ஒன்றே என்பதையாராவது நம்பச் சந்தேகிப்பார்களோ? அதுபோலவே நமக்கு இப்பிறப்புக்கு முன் வேறு பிறப்பு உண்டென்பதும் சகஜமாயிருக்கவில்லையோ? இது புனர் சன்மத்தைக் குறித்து விசாரிக்குமளவில் இன்னும் விசேஷமாக விளங்குமாதலால் இனி புனர் சன்மத்தைக் குறித்து விசாரிக்கப்புகுவோம்.

மறுபிறப்பு உண்டென்பதற்கு முக்கியமாக மூன்று காரணங்களுண்டு, அவற்றை வருகிற பத்திரிகையில் விசாரிப்போம்.

கு. பு. பொன்னம்பல முதலியார்.

சென்னை. புரசை. சதுர்வேதாகம சித்தாந்த சபையின் காரியதரிசி.

## ஈதற்காரணமும் அதன்பயனும்.

(404-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆ! நம் முன்னோர்கள் நமக்கென்று இனிமையுடன் இயற்றியிருக்கும் நூல்களைக் கல்லாதுபோனாலும், "கேள்வி முயல்" எனச்சொல்லாயும் ஒளவை சொல்லியவண்ணம், கற்றவரையணுகி, நற்பொருளையறிந்து நல்லிடத்தே நல்லவர்க்குத் தானஞ்செய்யாது வாணாளை வீணாளாகக்கழித்தல் மடமையன்றோ? இப்பவோ, பின்னையோ, இரவிலோ, பகலிலோ, எமன்வருநாள் என்றிருப்பினும் என்றைக்கேனும் ஒரு நாள் இறப்பது மெய். இருப்பது பொய். உடல் நிலையற்றதாகவிருந்தபோதிலும் மங்கலத்தின் பொருட்டு மெய்யென்று பெயரிட்டார் மெய்யுணர்ந்தோர். எனவே இப்பூதவுடம்பையொருவன் இழப்பதற்கு முன் புகழுடம்பைப் பெறவேண்டியது அத்தியாவசியம். அப்புகழுடம்பு பெறச்சிறந்தவுபாயம் ஈகையேயென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். ஈயுங்குணமில்லானை ஈயும் இலட்சியம் பண்ணாது. ஈயும் வள்ளலையோ ஈசனும் விரும்புவன். நிலையற்ற நிலவுலகில் நிலைத்திருப்பது புகழொன்றேயாம். "ஒன்றாகவுலகத்து உயர்ந்த புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில்" என்று தெய்வப்புலமைவாய்ந்த திருவள்ளுவநாயனாரும் கூறியுள்ளார். இம்மையில் ஒருவனுக்கு, கொடையே எப்பேறும்கொடுக்கும், பகையையுறவாக்கும், எவரையும் தம்வழியொழுகச்செய்யும். பூதவுடம்பழியச்சாதல் வந்த காலத்தும் தனக்கொருசாதலின்றி இப்பூதலமழியினும் புகழுடம்பு நீடூழிகாலம் நின்று நிலவும், மறுமையிலோ உடன்வந்து நற்கதியிலுய்த்து வான்வரையும் வணங்கும்படி செய்விக்கும். எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முன் கர்ணன் என்பான் ஒருவன் இருந்தான் என நாம் பெரியோர்களாலும் புராணங்களாலும் கேள்விப்படுகின்றோமேயல்லாது, கண்ணாரக்கண்டார் ஒருவருமிலர். என்றாலும் "கர்ணனுக்குப்பின் கொடையுமில்லை, கார்த்திகைக்குப்பின் மழையுமில்லை" என்னும் பழமொழியைப் படிப்பில்லாப்பெண்களும் பகர்கின்றனரே. ஆகவே அக்கர்ணன் இதுபொழுது பூதவுடம்பை வெறுத்து, புகழுடம்பையடைந்து இன்றும் நாளையும் நிலவுகின்றான் நிலவுலகில். "காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனகமாரி" என்று வில்லியால் பெருமைப்படுத்தப்பட்ட அக்கர்ணன் சாகப்போகுந் தருணத்தில் தான் செய்திருந்த புண்ணியமனைத்தையும்*பூமகள் கணவனுக்கு உதவின

தும், அம்மாதவன் மனமகிழ்ந்து "மருக! உனக்குவேண்டும் வரங் கேட்பாயாக, அதை அன்புடன் அளிப்பேன்" என்றதும் யாது வேண்டினான் கன்னன்.

"இன்னமும் யான் வினைப்பயனால் புவியில் பிறக்க நேரிடின் இல்லையென் றிரப்போர்க்கு இல்லையென்று இதயம் அளித்தருள்" என்பதே. அங்ஙனமே மாமகிழ்மாலும் "எத்தனை பிறவியெடுக்கினும் அவற்றுள் ஈகையுஞ் செல்வமும் எய்தி முடிவில் முத்தியும் பெறுதி" என மனமார வாழ்த்தி மறைந்தனர். இதைப்புராணவாயிலாக அனைவரும் அறிந்திருப்பர். ஏற்பதிகழ்ச்சியென்று முன்னமே கூறப்பட்டது. "இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பியதாமே தமியர் உணல்!! அஃதாவது பொருளின் குறைவை நிறைவாக்க இரந்தார்க்கிடாது தாங்களே உண்ணல், நிச்சயமாக அன்னியர்பால் ஏற்பதினும் துன்பந் தருவதாம். இனி புகழுடம்பு பெறுதானது உடல்பூமிக்கு ஒரு பாரமாயிருப்பதோடு வினைவும் குறைந்துவிடுமென வேதங்கள் கோஷிக்கின்றன. ஆதலின் எவரும் தங்களாலியன்ற வரையில் பிறர்க்குப் பொருளை ஈந்து புகழுடம்பைப் பெறவேண்டுமென்பது முடிவு.

தம்முடைமையை ஈயாது வைத்துப்பின் இழந்துபோகும் அறிவிலா அருளிலிகள், வறியார்க்கு வேண்டியவற்றை விருப்புடன் கொடுத்து, அதனால் அவ்வேழைகள் உவத்தலினால் அருளுடையார் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார்போலும். என்னே!

பின்வரும் குறளை எவரும் கனவிலும் நனவிலுங் கருதுவாராக.

(1) வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்

(2) தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

M. S. Subramania Iyer.
Teacher, Areyan Secondary School, Trichy.

## விநோதக்கூற்று.

புருஷன் தன் மனைவியிடம் நேற்றுச் செய்த வடையிருந்தால் கொண்டுவா என்றான் ?

மனைவி கொண்டுவந்து கொடுத்தாள்.

புருஷன் ஒருவடையைப் பிட்டுப் பார்த்துத் தன் மனையாள் கையில் திருப்பிக்கொடுத்துவிட்டான்.

மனைவி என்ன ஊசியிருக்கிறதா? என்றாள்.

அதுமாத்திரமன்றி நாலுமிருப்பதினால் தான் தையலுக்கேற்றதென்று கொடுத்து விட்டேன் என்றான்.

---

பரீதாபி-ஸ்ரீ ஆவணிமீ வெளிவந்த நமது செந்தமிழ்ச்செல்வப் பத்திரிகை 394-ம் பக்கத்தில் கேட்டிருக்கும் விடுகதைகணித வினாவிற்கு விடை.

வெற்றிலைத்தோட்டக்காரன்மகன்மூவர் மூத்தகுமாரனுக்குக்கொடுத்தது வெற்றிலை 50 இவன் 7 வெற்றிலை 1 காசு வீதம் 7 காசுக்கு விற்று மீதியான 1 வெற்றிலையை 3 காசுக்கும் விற்றான் ஆக காசு 10.

நடுகுமாரனுக்கு கொடுத்தது வெற்றிலை 30 இவன் 7 வெற்றிலை 1 காசு வீதம் 4 காசுக்கும்மீதியான 2 வெற்றிலையையும்வொன்றுக்கு 3 காசு வீதம் 6 காசுக்கும் விற்றான் ஆக காசு 10.

இளையகுமாரனுக்கு கொடுத்தவெற்றிலை 10 இவன் 7 வெற்றிலை 1 காசுக்கும் மீதியான 3 வெற்றிலையை ஒவ்வொன்று 3 காசு வீதம் 9 காசுக்கும் விற்றான் ஆக காசு 10.

மூவரும் விற்ற விலையும் சம்பாதித்தபணமும் சரியாய் விட்டன.

---

பரீதாபி-ஸ்ரீ ஆவணி-மீ வெளிவந்த நமதருமை செந்தமிழ்ச் செல்வப்பத்திரிகையில் 394-ம் பக்கம் கேட்டிருக்கும் விடுகதைக்கு விடை.

வெண்பா.

வெற்றிபுலி திங்கள் வெளிவந்த செல்வத்தில்
உற்ற விடுகதைக்கு வுள்ளவிடை—பெத்திபுடன்
காரார் கடலிற் களிப்புடனே தான்வாழும்
சீரார் மகரமெனச் செப்பு.

விடுகதை வினாவிற்கண்டபடி "மகரம்" என்ற வார்த்தையிலுள்ள எழுத்துக்களை முறையே மாற்றிப் படிக்கின், பலபொருள் புலப்படுவதைக்காணலாம்.

மூத்துசாமிஉடையார்.
எலி. ஸ்கூல். மானேஜர்,
பாதாங்கி, கைகளத்தூர், பெரம்பலூர் தாலூகா.

இந்த விடைக்கு பி. சி. பஞ்சனதய்யரும், எ. குப்புசாமி அய்யரும், ராஜகோபாலய்யங்காரும், பி. எஸ். சீனிவாசய்யங்காரும், எம். எஸ். சுப்பிரமணிய அய்யரும்,

ஸ்ரீ கௌரி மாயூரம் சித்தாந்த ரத்நாகரரும், முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்த் தலைமைப் போதகாசிரியரும் ஆகிய ஸ்ரீமத் பண்டிட்— S. வேலாயுத முதலியார் அவர்கள் இயற்றியது.

வெண்பா.

தென்னூர் மலைதந்த செந்தமிழாஞ் செல்வமெனும்
நன்மைப் பத்ரிகையை நானூரு—மின்னொளிபோற்
சுந்தரனு தப்புலவன் தோற்றுவித்தான் மன்பதைகள்
சிந்தைநலம் கொண்டிலகத் தேர்ந்து.

விருத்தங்கள்.

இந்திய மாந்தர் யாரு மினிதுற வாழ்த்திப் போற்றும்
நந்தலில் முனிவன் முன்னம் நளிர்மதி வேணிக் கொன்றை
சுந்தர னுபய பாதஞ் சூடிநற் சிரமீ தேற்றிச்
சந்தத மெவர்க்கு மாய தமிழ்மணா மினிது பெற்றே!......(க)

மற்புயத் திண்டோண் மன்னர் மகிழ்தரு மாண வாதி
விற்பனர் யாரு மோர வியந்தளித் தினிமை சாலச்
சொற்பொரு ணல்கு ஞானத் தூநெறி யாய்ந்த தெய்வ
நற்பொரு ளமிர்த நாம நாவல னளித்த சீர்த்தி,........(உ)

வல்லவர் எவரு மோர்ந்து மகிழ்ந்துரை கொளுத்த விந்நாட்
டொல்புவி நிலவு காலத் தோற்றிசுந் தரநா தப்பேர்
நல்லவன் இனிது வோங்கி நாளுஞ்செந் தமிழின் செல்வம்
பல்புகழ் பெற்று ஞாலம் பரிவுறப் பேணு மாதோ!......(ந)

——சமயாச்சாரியரில் ஒருவராய——

மணிவாசகர்.

பாண்டிநாட்டில் திருவாதவூரில் அமாத்யப்ராமணகுலத்தில் திரு அவதரித்த மணிவாசகர், தம் தந்தையரால் 'வாதவூரர்' எனும் திருநாமம் சூட்டப்பெற்று, இலக்கிய இலக்கணம் முதலிய கல்வி கேள்விகளிற் சிறந்து வல்லவராயினமைபற்றி, அக்கால் செங்கோல் ஓச்சிய அரிமர்த்தனபாண்டியன் அன்னவரை 'தென்னவன் பிரமராயன்' எனப் பெயரிட்டுத் தனது முதன்மந்திரியாக்கித் தன்னிடம் பன்னாள் வைத்திருந்தான்.

ஸ்ரீ அனாதிமல முக்த சித்துருவாய், ஆன்மகோடிகட் கெட்டாத வராய், ஆதியந்தங் கடந்தவராய் விளங்காநின்ற ஸ்ரீ பரமசிவன்மீது வைத்த பக்தியின் மேலீட்டால், வீடடைதற்கு ஹேதுவான தத்துவ ஞானத்தை உபதேசித்தருளும் நல்லாசிரியர் ஒருவர் தம்மைக் காணப் பன்னாள் பெரு ஆசைக்கொண்டிருந்தார் நம் திருவாதவூரர்.

தம்சேனைகளில் பரிகள் குறையக்கொண்ட பாண்டியன் திரு வாதவூரரைக் கீழ்க்கடற்றுரைக்கேகிப், பரிகள் பல வாங்கிவர ஏவ, அவர் திவ்ய இரதகஜதுரகபதாதிகள் சூழப் பணப்பொதிகள் அதி கம்கொண்டு அரசன் ஆணைப்படி அவ்வாறே சென்றார்.

ஆங்குத் திருப்பெருந் துறையின் கண் குருந்த மரத்தடியில் தொண்ணூற்றொன்பது அடியார்க் குழாங்களுடன் எழுந்தருளிய ஸ்ரீபரமசிவனை ஞானாசிரியனாகக்கொண்டு உபதேசம் பெற்றுத்தாம் கொணர்ந்த பொருளை கோயில் திருப்பணிகளில் நம் பிரமராயர் செல விட்டார். இவர் சிவ அநுக்ரகத்தால் பக்தி நனி சொட்டச் சொட்ட பாசுரம் பாடுவதில் வெகு திறமை அடைந்தாராகலின், 'மணிவாசகர்' அல்லது 'மாணிக்கவாசகர்' எனச்சிவபெருமானால் திருநாமம் சூட்ட விளங்கினர்.

மாணிக்கவாசகரால் குதிரைகளை வாங்குதற்பொருட்டு எடுத்துச் சென்ற திரவ்யம் யாவும் கோயில் திருப்பணிகளில் செலவாகிவிட்ட தாகக் கேள்விப்பட்ட அப்பாண்டியன் மனங்கொதித்துப் புண்ணாய் குதிரைகள் அவனிடம் வாராமைபற்றி 'என்னே தடையுளது' என்று அவர்க்கு ஓர் விஷிதம் ஒற்றர்கள் மூலமாய் விடுத்தான்.

இதனைக்கண்ட நம் சமயகுரவர் அனலில் இட்ட மெழுகுபோல் உருகி, யாது செய்வதென விளங்காதாராய், பூங்கமலத் தயனொடு மாலறியாத நெறியானை நெஞ்சுகள் நினைத்து, "ஹே! பெரும! ஆத்ம ரக்ஷக! அகில நிர்வாகரா! அதி அகோசா அசரீர அகண்டாகார அபார உத்தார நிர்விகார மனோகர குணாகர சராசரதரா!! நினை நம் பிய அடியேற்கு என்னேகதி?" என்று புலம்பலும், செங்கணயகன் அருள் மிக்குடையாராய் அன்பற்கு "பரிகள் யாவும் ஆவணிமூலத் தன்று நம் ஊர் அடையும் எனச் செப்பிச்சேவகர்களை விடுமின்—" என ஆக்ஞாபிக்க, இதனைச்செவியுற்ற சேவகர் அவ்வாறே அரசனி டம் கூறினர்.

அங்ஙன் குறிப்பிட்ட நாளிலும் பரிகள் வாராததைக் கண்ணுற்ற பாண்டியன், கோபத்தீமிக்குடையானாய் மணிவாசகரைச் சிறைப்படுத்தினன், கருணாநிதிக்கடவுள் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி அரசன் சமுகம்விடுத்து, அன்பரைச் சிறைநீக்கினார். மறுபொழுது புலர்வதற்குள் பரிகள் நரிகளாய், ஊளையிட்டு ஊரைத் தாம்ஸம்செய்ய, அரசன் பின்னும் கோபாக்னியில் மூழ்கி, அன்பரைச் சிறைப்படுத்தினதுமன்றி துன்புறுத்தினதைக் கேட்கும் நமது மனம் உருகி வருந்தாது என்னே செய்யும்?

அச்சிறையினின்றும் பக்தி கனி சொட்டச் சொட்டப் பாசுரம் பாடாது ஒழிந்தனரோ! அதா அன்றி, கருதரிய சிற்சபையில் ஆனந்த நடனமிடும் அம்பலத்தரசும் வாளா விடுத்தனரோ! அன்று அப்பெருமான் வைகையாற்றைப் பெருக்கவிட்டுப் பட்டினத்தின்மீது பாயச் செய்து, அன்பருக்காகப் பிட்டுக்கு மண்சுமந்து, அடிபட்டு, மணிவாசகர்தம் பெருமையை யாவரும் 'வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் அறிந்துய்யத் திருவிளையாட்டாடி மறைந்தார். இவை யாவும் நேரிற்கண்ட பாண்டியன் 'ஆவினைக்கண்ட பசு'போல, மனம் நைந்துருகி, பக்திமேற்கொண்டு, மணிவாசகர்தம் திருக்கால்களில் சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து தனது குற்றங்கள் யாவையும் க்ஷமிக்க வேண்டினன்.

பின்பு, மணிவாசகர் பதியின் திவ்ய சரணாரவிந்தங்களைக்கண்டு ஆனந்தம் உய்யத் திருப்பதிகங்களோதிக் கண்டுத் திருத்தலங்கள் தோறும் சென்று, கடைசியில் பூலோகக் கயிலாயமென வழங்கா நின்ற சிதம்பரத்தையடைந்து, ஊமைப் பெண்ணைப் பேசவைத்து சைவமதத்திற்கு விரோதமாய் நின்ற புத்தர்களைத் தம் சொற்றிறத்தால் வென்று விளங்கினர்.

ஒருநாள்—தத்வஞானம் முதிர்ந்த மாணிக்கவாசகர்க்கு வீடடையும் நாள் கிட்டினமையால் ஸ்ரீ ஆனந்த நடேசர் கிழ அந்தணவுருவந்தாங்கி அவர் இயற்றிய திருப்பாடல்களை தமது திருக்கையால் எழுதித் திருவாசகம் திருக்கோவையார் எனப் பெயருமிட்டு அடியில் திருச்சிற்றம்பலமுடையார் எனக்கையொப்பமிட்டு மறைந்தருளினர். மாணிக்கவாசகரும் ஆங்கு எழுந்த சிதாகாச ஜோதியில் கலந்தார்.

ஆ! என்னே! அளவிடுதற்கரிய அரும்பெரும் திருச்செயல்களைச் சைவமதத்தின்பொருட்டுச் செய்த இவர் தம் பக்தியின் விசேஷத்தை யாவரால் கூறுதற்கியலும், இவர் தாம் பாடிய திருப்பாடல்களைச் செவ்வனே படித்து, தீங்கனியையுண்டு அதன் ரஸத்தைக் குடிப்பதேபோல, அவைகளில் இடையிடையே அடிக்கடி விரவி வரும் சொன்னயம், பொருணயம் முதலியன கவனித்துச் சாராம்ஸத்தை உட்கொண்டு அவ்விதம் நடவாத மானிடர்கள் பிறந்ததனால் ஆயபயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்?

S. V. விவேகானந்தன்.
Municipal High School.
Mayavaram.

## பாந்திய' என்னும் பண்புடைக் குமரிசரிதை.

(இஃது Grant's Xenophon என்றதின் கண்ணுள்ளவோர் சிறுகதையினை முற்றுந்தழுவியதாம்.]

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பன்னருஞ் சிறப்புப் பெற்ற பண்புடைக் குமரி யென்னும்
பொன்னனாள் சரிதை தன்னைப் புன்மையே னுரைக்க லுற்றேன்
நன்னல முடையார் யாரு நவைதமைப் பொறுக்க மற்று
மென்னரு நாதன் றானு மினிதினி விதனைக் காக்க.

பண்டுபா ரரச ரெல்லாம் பணிவுசெய் நேர்மை யோனுந்
திண்டிறன் மன்னர்க் கெல்லாந் திலகமேபோல வுற்றான்
விண்டவர் தம்மின் மிக்க விறன்மதியுடைய 'சைரஸ்*
வண்டுறை மலர்க டாங்கும் வண்பாரசிக ராயன்.

மன்னவன் சைரஸ் தானு மகிதல வேந்தர்க்கெல்லாம்
முன்னவ னறிவி னானு முனிவினை யறியான் சற்றும்;
நன்னல முடையான் றக்கநண்பனே யாவன் யார்க்கு
மின்னலை விலக்கி வைக்கு மிந்திர னிகர்த்தான் மாதோ.

நுண்ணிய வறிவன் றானு நவலுதற் கரிய நீல
வண்ணன்போ லுலகி னீதிவழங்கியே வந்த காலை
மண்ணினின் மாந்தர் யாரு மகிழ்வுற வாழ்ந்தார் மற்றுந்
தண்ணிய வாயன் செங்கோ றழைத்ததே யினிதாயெங்கும்.

† Panthea. * Gyres

நீதியே யென்றுங் கூறி நித்தனை யொக்கு நந்தங்
கோதிலாச் சைரஸ் தன்செங் கோலினை நாட்ட வேண்டி
யேதிலர் சிலர்மேற் றன்றண் டெடுக்கவே நேர்ந்த போழ்து
மேதமர் துவக்கிப் பின்னை மூர்க்கமாய்த் தொடர்ந்து நிற்க.

வீசுறு வாட்கள் கொண்டு விளைத்தபெச் சமரி னூடே
தேசுறு மாயன் றன்னின் றிண்மைகொள் வீர ரொன்னார்
பூசறை யதனைத் தாக்கிப் பலந்தமைச் சிறையி லிட்டு
நேசனைப் பிரிந்து நின்ற நேரிழை தன்னைக் கண்டார்.

பொன்னனூ னவளை விட்டுப் போகவே துணிந்த நேய
னின்னுமோர் நாடு நோக்கி யேகினன் றாதாய்; மற்றை
மன்னவர் தங்களோடு மங்கைமார் தங்க ளோடும்
வன்னமா மயிலு மங்கு வதிந்தனள் சின்னா ளானும்.

அரும்பெரு மணிக ளோடு மணங்கினை யன்று வீர
ரிருளினிற் கொள்ளைகொண்டே யிருத்தினர் மற்றோர் பக்கம்
அருளுடை யுண்ணல் சைர ஸவன்றனக் கீய வென்றே;
அருளிலா வீரர் தம்மை யமலனுந் தண்டி யானோ?

தென்புல வேந்தன் றன்னிற் றெள்ளிய நீதி மானாய்
முன்பதை தமக்கோர் பேத மருவுறு வண்ணங் காக்கு
மன்புடை யரசன் சைர ஸக்கண மதனைத்தேர்ந்து
தன்பெரு நண்பற்கூவித் தையலைக் காத்தி யென்றான்.

என்னலு மன்னுளன்பி னினியனு 'மாஸ்பி*ஸ'ன்போன்
மன்னவ நீயு மிந்த மாதினைக் கண்ட துண்டோ
வென்னவே யதிபன் றானு மின்றென வியம்பப் பின்னர்
முன்னவ னரயன் றன்பான் மொழிந்தனன் மீண்டு மங்கு.

பொன்னினைச் சால வொக்கும் புண்ணிய வனிதை தன்னை
யென்னெனப் புகழ்வேன் யானு மினியவென் னன்ப கேணீ
மன்னவன் றன்னை நீயு மணந்துகொள் ளென்ற வெம்முன்
னென்னல ரவர்பால் வந்தே னேனவெ வாற்றி நின்றாள்

கண்டிலே னவள் போற் கண்ணாற் காணநீ யின்னே போதி
கண்டுபோ லினியாடன்னைக் காணுறாக் கண்ணுங் கண்ணோ?
வண்டுமொய்த் தனைய கூந்தல் வனிதையா மிவளைக் கண்டால்
விண்டவர் தாமுஞ் சற்று விறன்மதி கலங்கு வாரே.

---

* Araspes

தெண்டிரைக் கடல்சூழ் வையத் திருமலர்ப் பொன்னை யொத்த
பெண்டிரிற் பெரியா டன்னைப் பேசுறுப் பெருமை யென்னே
உண்டுகொல் லன்னாள் போல வுலகினின் மாது மென்று
கண்டவ னுரைத்த பின்னர்க் காவலன் கழற லுற்றான்.
தாமரைத் தடங்கண் ணார்தந் தன்மையை யறிந்த பின்னு
நாமவர் தமதுபக்கம் நண்ணுவ திழிவே யன்றோ?
தாமவ ரடிமை போலாய்த் தயங்குறும் பலரைக் கண்டுங்
காமமே கொண்டே மாகிற் கருமமு நடக்குங் கொல்லோ?

(இன்னும் வரும்) K. S. கிருஷ்ணமூர்த்தி.

## இதுவன்றோ வியப்பினும் வியப்பு !!

நன்னாடுகளிலும் முன்னாடாகிய சோழநாட்டின் திலகம்போன்ற தஞ்சைமாநகர்க்கு இருகாததூரத்திலுள்ள "திருப்புறமயம்" என்ற மூதூரில் விநாயகர் ஆலயம் ஒன்றுள்ளது. ஆங்கு வீற்றிருக்கும் விநாயகர், சுமார் ஒருஅடி உயரத்தில் நிற்கும் வண்ணமாய் செய்யப் பட்டிருக்கிறது. மிக்கவனப்புடையது. நிற்க, ஓரே காலத்தில் ஓர் ஆடம் (64-சேர்) தேனை ஓர் பாத்திரத்திலிட்டு அச்சிலையைத்தூக்கி வைத்தால் அவ்வுருவம் சிறிதும் தெரியாதவண்ணம் அமிழ்ந்திருக்கும். பின்பு, அதனை, அத்தேனிலிருந்து அப்புறப்படுத்தி, சிறிது சிறிதாக அதன் சிரசிலிருந்து கீழேவழியவிட்டால், ஓர் துளியேனும் அரைக்குக் கீழிறங்குவதில்லை. இத்தலமானது சமயகுரவர்களினாலும் பதிகம் பாடப்பெற்றுள்ளது. இவ்வியப்பைக்கண்டவர் அத்தலம் விட்டு அகலார் என்பது திண்ணம். P. C. பஞ்சநதம்.

நமது "செந்தமிழ்ச்செல்வ"த்தின் 2-ம்பகுதி 2-ம்தொகுதியின் 331-ம் பக்கத்தில் ஸ்ரீபாந். வே. முத்தஞசாரி அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருந்த 'சத்தமாதர் பூஜாக்கணித வினாவிற்கு விடை

இன்னிசை வெண்பா

மன்னெழு மாதரை வந்திக்கத் தம்பிரான்
பன்மலர்நா னூறுமூப் பான்மூன்று கொண்டொவ்
வொருவர்க்கு மன்றே யுவந்தீந்த பூக்கள்
இரு நூற்றோ டைம்பத் திரண்டு

மூ. கோவிந்தசாமிச்சேதுராயர் இளங்காடு.

## பலதேசவர்த்தமானம்.

**ஒரு ஸ்திரீயின் பதிபக்தி:**—கல்கத்தா முனிசிபாலிடியில் கலெக்டர் வேலையிலமர்ந்திருந்த ஓ. ஸி. டட்தனது 77-வது வயதில் இறந்தார். அவர் மனைவிக்கு வயது அப்பொழுது 70 சில தினங்களுக்கு முன் அவள் தன் புருஷனின் நாடியைப் பிடித்துப் பார்த்து புருஷனுக்கு அந்தியக் காலம் சமீபித்து விட்டதென்பதை அறிந்து பக்கத்தில் சற்று உட்கார்ந்துவிட்டு எழுந்து "நான் விதவையாவேனென்று என் தலையில் எழுதியிருக்கவில்லை. நான் உயிருடனிருக்குமட்டும் அவர் இறக்கமாட்டார்" என்று சொல்லிவிட்டு புருஷன் பக்கத்தில் படுத்தாள். வீட்டிலுள்ளோர் முதலில் அவள் உறங்குவதாய் நினைத்தார்கள். பிற்பாடு அவளுடைய சரீரத்தைத் தடவிப்பார்க்கும் பொழுது குளிர்ந்திருந்தது. ஆவி மோக்ஷ லோகம் சென்றுவிட்டது.

***

**பொய் நோட்வித்த நான்கு கள்ளர்கள்:**—கல்கத்தாவில் நான்கு பேர் ஒரு இடத்தில் நோட்டைக் கொடுத்து மாற்றுவதற்குப் பார்த்தார்களாம். ஒவ்வொரு நோட்டும் ஆயிரம்ரூபா நோட்டாயிருந்தது. கூர்ந்துகவனிக்கவே; உண்மைநோட்டு அல்லவென்றும், பொய்யாகத் தயார்செய்யப்பட்டவை யென்றும் தெரிந்ததாம் இந்நான்குநோட்டுகளிலும் 1907-ம் வருஷம் அக்டோபர் மீ 10-ம் தேதி போடப்பட்டிருக்கிறதாம் நோட்டுகள் உண்மை நோட்டிற்குச் சிறிதும் மாறுபடாமல் தயாரிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், போட்டகிராப் முறையைக்கொண்டு செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், தெரிகிறது கள்வர்களை அரஸ்டு செய்து வைத்திருக்கிறார்கள்.

***

**பிச்சைக்காரனும் லார்டு கார்மிகேலும்:**—லார்டு கார்மைகேல் ராஜ்ஷாய் என்னும் ஊரில் வண்டியில் போய்க்கொண்டிருந்தபோது ஒரு பிச்சைக்காரன் கூட்டத்தின் மத்தியிற் புகுந்து கவர்னர் வண்டியை அணுகித்தன் கையை நீட்டினனும். கவர்னர் சிறிதும் தாமதியாமல் தம்முடைய கரத்தைநீட்டி அவனோடு கை குலுக்கினாராம். கவர்னர் செய்த இந்த அரிய செயலை அந்தப் பிச்சைக்காரன் எவ்விதம் எவ்விதம் பாராட்டினனென்பது அறியக்கூடவில்லையாயினும் கவர்னர் செய்த இக்காரியம் அக்கூட்டத்தாரின் மனதில் ஒரு வகையான அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கிற்று என்பது மாத்திரம் நிச்சயம். லார்டு கார்மைகேல் சென்னைக்கவர்னராயிருந்து சமீபத்திற்றான் வங்காளக் கவர்னராய்ச் சென்றார் என்பது மித்திரர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

***

**ஒரு ரெயில்வேப் பிரயாணியின் சாமர்த்தியம்:**—ஐரோப்பாவில் வாக் நதியின் பாலத்தின்மீது ரெயில்வண்டி ஓடிக்கொண்டிருக்கும்

போது, ஒரு பிரயாணி, அந்நதியில் படகிலிருந்து விழுந்த ஒருவன் தத்தளித்துக் கொண்டிருப்பதைக்கண்டு ரெயில் வண்டிகள் அபாய அறிவிப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் சங்கிலியை இழுத்து, வண்டியை நிறுத்தி ஆற்றில் குதித்தான். குதித்தவன் அவனைப் பத்திரமாய்க் கொண்டுவந்து கரைசேர்த்து விட்டு, மீண்டுமவன் நிறுத்திய வண்டியில் வந்தேறினான். அவ்வண்டியிலிருந்த மற்றும் பிரயாணிகள் அவன் துணிகரச்செய்கைக்கு ஆச்சரியப்பட்டு அவனுக்கு உயர்ந்த நன்கொடை யளித்தனர். ஆனால் கார்டு மாத்திரம் அவன் மீது வெறுப்புற்றார். வண்டியானது நியூட் ஸ்டேஷன் வந்ததும், மன்னுயிரைத்தன்னுயிர் போல் பாத்துக்காப்பாற்றினவன். ரெயில்வே சட்டத்தின்படி ரெயிலில் ஒருவருக்கும் அபாயமில்லாதிருக்கும்போது வண்டியை நிறுத்தினதற்காக அரஸ்டு செய்யப்பட்டான். குற்றம் எவ்விதம் சுமத்தப்பட்டாலும் இவனது சமயோசிதமும் தைரியமுமான செய்கை மெச்சத்தக்கது,

***

**ஒரு பெரிய குழந்தை:**—உலகத்தில் தினந்தவறாமல் எவ்வளவோ புதுமைகளைக் கேட்கிறோம். ஆச்சரியங்களைப் பார்க்கிறோம். ஏற்கனவே பூமண்டலத்திலுள்ள ஆச்சரியங்களில் இப்போது நாம் சொல்லப்புகும் ஆச்சரியமும் ஒன்றாகும். அமெரிக்காவிலுள்ள கானடா தேசத்தில் ஒரு குழந்தைக்கு ௨௬-மாசம், அதாவது இரண்டு வருஷம் இரண்டு மாதந்தானாகிறது, அதன் நிறை ௧௨௭-ருத்தல்களாம். அதன் மார்பளவு ௪௰-அங்குலமிருக்கிறதாம். ஹெளதாரன் என்னும் கிராமத்திலுள்ள ஒரு குடியானவன் தம் பதிகளுக்குப் பிறந்த இக்குழந்தையை இதன் பெற்றோர் தூக்கமுடியவில்லையாம். இருபது அல்லது முப்பது வயதுள்ள சாமான்யஜனங்களே ௧௨௰-ருத்தலுக்கு அதிகமாக நிறையிருப்பதில்லை யென்றால் இந்த இரண்டு வருஷக்குழந்தை எவ்வளவு நிறைகொண்டிருக்க வேண்டும், ஐந்து அல்லது பத்து ருத்தலுக்கு அதிகமிருக்க நியாயமில்லை, அப்படி இருக்க இக்குழந்தை ௧௨௭-ருத்தல் நிறையிருக்கிறதென்றால் இதை மனுஷப் பிறவி யென்று சொல்லலாமா!! ராக்ஷதப்பிறவி யென்றே சொல்லுதல் வேண்டும் இந்தச் சிசுவளர இதன்சரீர ஆயிலுறுதியும் வளர்ந்து ஆஜானுபாகுவாகு மென்பதற்குத் தடையுமுண்டோ? வி-ன்

***

**பின்னுமிருவீரர்:**—கலியுகத்திலே சாண்டோ, ராமமூர்த்திநாயுடு சாமி ஐயங்கார் மகமதுசெல் என்பவர்கள் ஒருவர்பின் ஒருவராகச் சரீரபலசாலிகளாய்த் தோன்றி நிற்கின்றனர். இப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பொன்னுசாமிநாடார் என்னும் ௨௫-வயது வீமனுந்தோன்றியிருக்கின்றனர். இவரது செய்கை முழுவதும் மெஸ் இராமமூர்த்தியைப் போலவேயிருக்கிறதாம். ஐதராபாத் திலேபண்டிதர் ராமயோகராவ் என்பவருந் தோற்றியிருக்கிறார். இவர் பிராமணர் இவரும் ராமமூர்த்தியைப்போன்றவராம்,

***

இனாம்! இனாம்!!

தபாற்செலவுமில்லை. விலையுமில்லை.

**நீங்கள் இல்லறத்தில் அல்லல் நீங்கி நீடித்த சுகவாழ்வைப்பெற விரும்பினால் உடனே உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள்.**

## ஸ் தி ரீ ச மா க ம்.

என்னுமோர் சிறந்தபுத்தகத்தை பொது நன்மையைக்கருதி இனாமாக அனுப்புகிறோம். இப்புத்தகத்தில் நம்முன்னோர்செய்த பொன்போன்ற விதிகளை அமைத்து எழுதப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய தவசியம்,

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

**வைத்தியசாஸ்திரி**

**மணிசங்கர் கோவிந்தஜி.**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

22 பிராட்வே & 96, மவுண்ட்ரோட் மதராஸ்.

ஏஜெண்டு:—

**M. A.** நெல்லையப்ப முதலியார்,

38 சின்னக்கடைத்தெரு,

திருச்சிறைப்பள்ளி.

# A GIFT TO STUDENTS.

**Look Sharp!** **Fair Opportunity!!**

## THE SHORTHAND TYPEWRITING INSTITUTION.

TRICHINOPOLY.

**This institution is situated at No. 49**

*JAFFER SAHIB STREET, TRICHY FORT.*

UNDER THE NAME OF

## THE GEORGE TECHNICAL INSTITUTION,

OPENED ON THE 1st SEPTEMBER 1912.

**Shorthand Typewriting and other Technical Subjects** are taught in this Institution by efficient teachers. Students are coached up for Government and other incorporated Examinations. They are trained not only for these examinations, but also taught how to make Typewriter a livelihood. **Mechanism and Shorthand a speciality**

Fees are cheap and can be paid by instalments, concessions will be given to students who are clever and to those who cannot afford to pay their fees and are certified by any Gazetted Officer to that effect. Prizes will be given to those who pass in the First Class.

All kinds of Job works will be undertaken and delivered promptly with neat execution.

Shorthand and Tspewriting Requisites can be had here.

*For Particulars Apply:—*

**V. JAYARAM NAIDU.**
**Manager,**

வீரியவிருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்பு படுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான இரண்டு உயர்ந்த ரத்னௌஷதங்கள்

## மதன மஞ்சரி மாத்திரைகள்.

“நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை.”

1. இவை ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2, இரத்தத்தை சுத்திகரித்து விருத்திசெய்து தேகத்திற்கு நல்லதிடத்தையும் மேனியையுங் கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்வித நரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண் எரிச்சலைப் போக்கடித்து மூளையைக்குளிரச்செய்து ஞாபக சக்தியை விஷேஷித்து தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கர்ப்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## நபும்ஸகத்வாரி கிருத்

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரியமுண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள் ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள் ஜமீந்தார்கள். அமீர்கள் முதலானோர்கள், ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள்தேடாமலும், கேளாமலும் அனுப்பியிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும க்ஷேமத்துக்கும பெரிய வழி காட்டியாகும்.

இங்கிலீஸ், தமிழ், தெலுங்கு குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் இந்த புஸ்தகத்தை இனாமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன

## ராஜவைத்திய நாராயண்ஜி கேசவ்ஜி.

புரோப்ரைட்டர் ஆயுர்வேதோதய ஔஷதசாலை.

No. 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை

## வேண்டுகோள்.

### செந்தமிழ்ச் செல்வச்சந்தா நேயர்களே!

நமது செந்தமிழ்ச் செல்வத்தின் இரண்டாவது வருடந்தொடங்கிச் சற்றேறக்குறைய ஆறுமாதமாகியும் சந்தா செலுத்தாதிருக்கலாமா? தயவு செய்து சந்தாவைச் செலுத்தி உதவி புரியுங்கள். பத்திரிகை பிந்துவதற்குக்காரணம் யாதாயிருக்குமென்பதைப் பலரும் அறிவர். நமது செந்தமிழ்ச் செல்வத்திற்காகச்சொந்தத்தில் அச்சுக்கூடம் வாங்கவும் பண்டு (Fund) சேர்க்கவும் தீர்மானித்திருக்கிறோம். அதற்காகப் பரோபகாரப் பிரபுக்கள் உதவிசெய்யின் வந்தனத்துடன்பெற்று பத்திரிகையின் வாயிலாய் நன்றி காட்டுவோம்.

சென்றவருஷம் பன்னிரண்டு மாதமும் பத்திரிகை வாங்கிவந்து இரண்டாவது வருஷத்து முதற் பத்திரிகையை முதல் வருஷத்திற்காக வி. பி. அனுப்பியபொழுது திருப்பிவிட்டார் பலர். அவர்களை என்னென்று வாழ்த்துவமோ! இதுதான் அன்னார்செய்யும் உபகாரம் போலும். உள்ளூர்ச் சந்தாதாரரும் நாம் அனுப்பும் ஆளின்காலை யொடித்துக் கருணைகாட்டாதிருக்கின்றனர்.

பத்திரிகை அனுப்புவதை யெல்லாம் பெற்றுக்கொண்டிருந்தோரும், அனுப்பச்சொல்லியோரும் 2-வது ஒருபத்திரிகையை 4-மாதம் வரைபெற்றுக்கொண்டிருந்து வி! பி. தபாலிலிருந்த 5-வது பத்திரிகையை திருப்பிவிட்டார்கள்.

வி. பி. யில் அனுப்பினபின் திருப்புவதென்பது எத்தகைமையை [illegible]ப்புடையதோ அறியேம். இத்தனைமாதம் வாங்கிக்கொண்டிருந்து திருப்புவது நாகரீகமாமா? இதுவும் தெரியாதிருப்பரா!

பத்திராதிபர்.


EMPIRE OF INDIA LIFE ASSURANCE; Coy; (LTD.)

**BOMBAY**

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c. Please Apply to:—

J. G. GNANADURAI,
S/o Mr. J. GNANAMUTHU B. A. L. T.
Puthoor, Trichinopoly.